ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2050/35 - 2017 දෙසැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.12.21

2050/35 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460 ஆம் அத்தியாயம்)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் : பல/2/1/4/10.

குறிப்பிலக்கம்.: LD/05/2001/PC/243.

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கமுடைய காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

காலி மாவட்டம், பலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 88ஏ, கந்தெகொடை கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட கா. 4292 உம் 2017.11.14 ஆந் திகதியுடைய சுவட்டு வரைபடத்தில், இலக்கம் 01, 02 எனக் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணம் சுமார் 0.0017 ஹெக்டயார் அளவுடையதான மரதானவத்தை எனும் காணி கந்தெகொடை தெவட்ட வீதியில் லத்து ஷீலாவின் வீட்டுக்கு அண்மையில் இருந்து புகையிரத வீதி வரை 12 அடியாக வீதியை விஸ்தரிப்பதற்காக காணி எடுத்துக் கொள்ளல்.

**1. துண்டு இல.: 01; மரதானவத்தை; விஸ்தீரணம்: 0.0016 ஹெக்டயார்**

வடக்கு: எல். ஏ. பி. கே. த சில்வா உரிமை கூறும் மரதானவத்தை; கிழக்கு: எல். ஏ. பி.கே. த சில்வா உரிமை கூறும் மரதானவத்தை; தெற்கு: கந்தெ கொடை தெவட்ட வீதி; மேற்கு: கந்தெகொடை தெவட்ட வீதி.

**2. துண்டு இல.: 02; மரதானவத்தை; விஸ்தீரணம்: 0.0001 ஹெக்டயார்**

வடக்கு: கந்தெகொடைதெவட்ட வீதி; கிழக்கு: கந்தெ கொடைதெவட்டவீதி; தெற்கு: டப். ஜனக வஸந்த உரிமை கூறும் மரதானவத்த; மேற்கு: டப். ஜனக வஸந்த உரிமை கூறும் மரதானவத்தை.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலப்பிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படி வேண்டிக் கொள்ளப்படு கின்றனர்.

மேலும் 2018, மாச்சு மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் இரண்டு பிரதிகளை யுடைய எழுத்து மூல ஆவணத்தினூடாக எனக்கு அறிவிக்க வேண்டும்.

பி.பீ. எஸ்.அனுராதி,
பிரதேச செயலாளர்,
பலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
பலப்பிட்டிய,
2017, திசெம்பர் 16.



1A - G 26836 — 17 (2017/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*